DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 8 |
| Name | : | **வேலு** |
| Father's Name | : | குப்புச்சாமி |
| Village | : | ஆலம்பக்கோட்டை |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 75/2025 |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2, 3 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 ம் எதிரிகள் சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.04.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போதுஆலம்பக்கோட்டையில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். சாட்சி பஞ்சவர்ணம் எனது சித்தப்பா அவர் தற்போது உயிருடன் இல்லை. அ.சா.1, 2 ஐ தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அனைவரும் எனது உறவுக்காரர்கள். எனக்கு சாட்சி ராபர்ட் கென்னடி என்பவரை தெரியாது. எதிரி அர்ஜீனன் எனக்கு மருமகன் ஆவார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் முறையே **அ.த.சா.ஆ.2** மற்றும் **அ.த.சா.ஆ.3** ஆகும். வழக்கு சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து போலிசார் எனது வீட்டிற்கு வந்தார்கள். போலிசார் என்னிடம் கையொப்பங்கள் கேட்டதன் பேரில் நான் போட்டுக் கொடுத்தேன். அந்த கையொப்பத்தை நான் எதற்காக

போட்டுக் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. போலிசா்ர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 14.08.2021ம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் திருவேகம்பத்துார் காவல்நிலைய வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை காவல்நிலையத்திற்கு வரும்படி அழைத்தார் என்றும் நானும் ராபர்ட் கென்னடி என்பவரும் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்று,ம் அங்கு போலிசார் வழக்கின் எதிரி அர்ஜீனன் தனிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும் பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மற்றும் போலிசார் முன்னிலையில் நாங்களும் உருவாட்டி பாலத்தின் கீழ் செல்லும் முட்புதர் மறைவில் எதிரி அர்ஜீனன் அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்த சுமார் 46 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்றை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனது மருமகன் என்பதால்வேண்டுமென்றே வழக்கு சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் செய்த அ.த.சா.2 மற்றும் 3ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாது. அது யாரால் எங்கு எப்போது வைத்து எழுதப்பட்டது என்று தெரியாது. இந்த கையொப்பங்கள் நான் வீட்டிலிருக்கும்போது போலிசார் ஊருக்கு வந்ததற்காக கையெழுத்து போடச்சொன்னதன் அடிப்படையில் எனது வீட்டில் வைத்து போட்டுக்கொடுத்தேன். என்னுடன் யாரும் அதில்

கையொப்பமிடவில்லை. அ.சா.1 துரைப்பாண்டி எனது சித்தப்பா மகன் தம்பி ஆவார். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.17 14:16:02 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.